தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சேலத்தில் 103 டிகிரி வெயில்**

**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக சேலத்தில் வியாழக்கிழமை (ஏப்.3) 103 டிகிரி வெயில் பதிவானது. இதே போல கோவை, தருமபுரி, மதுரை, பாளையங்கோட்டை, திருச்சி, திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்), வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

வியாழக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

சேலம் 103

திருச்சி, மதுரை 102

திருப்பத்தூர்

(வேலூர் மாவட்டம்) 101

கோவை, தருமபுரி,

பாளையங்கோட்டை,

வேலூர் 100

சென்னை

மீனம்பாக்கம் 94

சென்னை

நுங்கம்பாக்கம்,

கடலூர் 93

கொடைக்கானல் 73

**மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை ஏலம்**

**மொடக்குறிச்சி,**

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் 57 மூட்டைகளில் 900 ஆயிரம் கிலோ கொப்பரைகளையும், 5 ஆயிரம் தேங்காய்களையும் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 91.95-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 86.85-க்கும், 2-ஆம் தரம் அதிகபட்ச விலையாக ரூ. 86.15-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 68.15-க்கும் என மொத்தம் ரூ.80 ஆயிரத்துக்கு விற்பனையானது.

தேங்காய் அதிகபட்ச விலையாக ஒரு டன் ரூ. 32 ஆயிரத்து 259-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 23 ஆயிரத்து 600-க்கும் என மொத்தம் ரூ. 48 ஆயிரத்துக்கு விற்பனையானது. தேங்காய் மற்றும் கொப்பரை மொத்தம் ரூ. 1 லட்சத்து 28 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

**நெல் விளைசசல் குறைவு**

**சாத்தான்குளம்,**

தூத்துக்குடி மாவட்டம் முறப்பநாடு பகுதியில் நெல் சாகுபடியில் போதிய விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

தூத்துக்குடி மாவட்டம் தாமிரவருணி நதியில் மருதூர் மேலக்கால்வாயில் முதல் பாசன பகுதி முக்கவர் கால்வாயாகும். இங்கு நேரிடையாக 200 ஏக்கர் பாசனமும், முத்தாலங்குறிச்சி குளம் மூலமாக சுமார் 300 ஏக்கர் பாசனமும் பாசன வசதி பெறுகிறது. இந்த கால்வாய் மூலமாக படுகையூர், முறப்பநாடு, பக்கபட்டி, ஆழிகுடி பகுதியில் உள்ள வயல்வெளிகளும். முத்தாலங்குறிச்சி குளத்து வழியாக முத்தாலங்குறிச்சி மற்றும் ஆலங்கால் பகுதி வரை உள்ள வயல்வெளிகளிலும் விவசாயம் நடந்து வருகிறது. இங்கு வாழை மற்றும் நெல்பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

இந்த பாசன பகுதியில் முன்கார், பிசானம்,கார் போன்ற மூன்று சாகுபடி நடந்து வந்தது. கடந்த 10 ஆண்டு காலமாக மருதூர் மேலக்காலில் மராமத்து செய்யாததால் முன்கார் சாகுபடி நிறுத்தப்பட்டது. தற்போது போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் பிசான சாகுபடியைத் தவிர மற்ற இரு சாகுபடியும் செய்யமுடியவில்லை. மேலும் வாழைப்பயிரில் காட்டும் ஆர்வத்தை நெல்பயிரிட விவசாயிகள் காட்டுவதில்லை. காரணம், நடவு, களை எடுத்தல்,அறுவடை போன்ற பணிகளுக்கு போதிய ஆள்கள் கிடைப்பதில்லை. மேலும் ஊதியமும் மூன்று மடங்காக கூடிவிட்டது. எனவே பல இடங்களில் பிசான சாகுபடி காலத்தில் கூட வயல்வெளிகள் தரிசாக கிடக்கின்றன.

இதற்கிடையில் தற்போது பிசான சாகுபடி அறுவடை நடந்து வருகிறது.

மருதூர் மேலக் கால்வாயில் முதல் பாசான பகுதியாக இருந்தாலும் கூட இறுதி காலத்தில் தண்ணீர் இல்லை. பாபநாசம் அணையில் போதிய தண்ணீர் இல்லாமல் வயல்வெளிகள் வறண்டு காணப்படுகின்றன. இதனால் மகசூல் முழுவதும் பாதிக்கப்படுகிறது.

இது குறித்து முறப்பநாட்டைச் சேர்ந்த விவசாயி கணேசன் கூறும்போது,

தற்போது நெல்லுக்கு போதிய விலை இல்லை. பெரிய நெல் கோட்டைக்கு 2300 ரூபாயும், சிறிய நெல் கோட்டைக்கு 1800 ரூபாயும் விலை உள்ளது. இப் பகுதியில் ஒன்றரை மேனி விளைச்சல் இருந்தால்தான் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். ஆனால் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் பயிர் சரியாக விளையவில்லை. ஒரு மேனிகூட சரியாக விளையவில்லை. எனவே செலவழித்த பணம் கூட கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறோம் என்றார்.

முக்கவர் கால்வாய் விளைநிலங்கள் அனைத்தும் தாமிரவருணி கரையில் தான் உள்ளது. தற்போது தாமிரவருணி ஆற்றில் மணல் அள்ளிய காரணத்தினால் நிலத்தடி நீர் முழுவதும் வற்றிவிட்டது. ஆற்றுப் படுகையில் இருந்தால் நிலத்தில் எப்போதும் ஈரப்பதம் இருக்கும். இதனால் மழை இல்லாவிட்டாலும் நிலத்தடி நீரில் இருந்து தண்ணீர் எடுத்து பயன்படுத்தலாம். நிலத்தடிநீர் வற்றி, மழையும் முறைப்படி இல்லாத காரணத்தால் முறையாக விளைச்சல் இல்லை. இதே நிலை நீடித்தால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு விடும் அவல நிலை ஏற்படும் என அப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஏப்., 15 முதல் 45 நாள் வங்கக்கடல் மீன்கள் "பிசி" : "தொந்தரவு செய்யக்கூடாத' தடைக்காலம் அமல்**

மீன்களின் இன விருத்தியை கருத்தில் கொண்டு, தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட, கிழக்கு கடற்கரை பகுதிகளில், 45 நாட்கள் மீன்பிடி தடைக்காலம், ஏப்., 15ம் முதல் அமலுக்கு வருகிறது.

இனவிருத்தி காலம் : கிழக்கு கடற்கரை பகுதியில், ஏப்ரல், மே மாதங்கள், மீன் உள்ளிட்ட கடல் உயிரிகளின் இனவிருத்தி காலமாக, மத்திய வேளாண் அமைச்சகம் கண்டறிந்துள்ளது. அந்த நாட்களில், மீன்கள் ஆழ்கடலில் முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும் என்பதால், கடலில் மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில், இந்த கால கட்டத்தில், 45 நாட்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா கடல் பகுதிகளில், 45 நாள் மீன்பிடி தடை, ஏப்., 15ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இந்த நாட்களில், ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும் விசை படகுகள், இழுவை படகுகளுக்கு அனுமதி கிடையாது. சென்னையில், 1,300 விசைப் படகுகள் உட்பட, தமிழகம் முழுவதும், 13 ஆயிரம் விசைப் படகுகள், கடலுக்குள் மீன்பிடிக்க செல்லாது; கரையில் ஓய்வெடுக்கும். இதனால், மீன் தொழில் ஒட்டுமொத்தமாக முடங்கும். சிறு பைபர் படகுகள், கட்டு மரங்கள் வாயிலாக மீன்பிடி தொழில் நடந்தாலும், குறைந்த அளவே மீன்கள் கிடைக்கும். கர்நாடகா, மகாராஷ்டிராவில் இருந்து, மீன் வரத்து இருந்தாலும், தேவையில், பத்தில் ஒரு பகுதியே கிடைக்கும் என்பதால், மீன்கள் விலை, பெருமளவு உயரும் அபாயம் உள்ளது.

தடைக்கால நிவாரணம் : மீன்பிடி தடைக்காலத்தில், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும் என்பதால், 3.13 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு, தமிழக அரசு, தலா, 2,000 ரூபாய் தடைக்கால நிவாரணம் வழங்கி வருகிறது. தடைக்காலத்தை, படகுகளை சீரமைக்க, மீனவர்கள் பயன்படுத்திக் கொள்வர்.

## கோடையில் செம்மறி ஆடுகளை தாக்கும் உதட்டுப்புண் நோய்

**தர்மபுரி**: கோடை காலத்தில் செம்மறி ஆடுகளை உதட்டுப்புண் நோய் தாக்கும் அபாயம் உள்ளதாகவும், ஆடுகளுக்கு உதடுகள் சிவப்பாக, புண் போல் இருந்தால் உடனடியாக கால்நடை மருத்துவரை அணுக வேண்டுமென, கால்நடைத்துறை அதிகாரிகள், விவசாயிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டை காட்டிலும், இந்தாண்டு அதிகமான வெப்பம் நிலவி வருகிறது. கோடை காலத்தில், ஆடுகளை உதட்டுப்புண் என்ற ஒரு வகை நோய் தாக்கி வருகிறது. இந்நோய், பேராபக்ஸ் எனப்படும் வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. ஒரு ஆட்டில் இருந்து, மற்றொரு ஆட்டுக்கு, இக்கிருமி எளிதில் பரவும் என்பதால், இந்நோய் ஆபத்தானது.

நோய் பாதிப்புக்கு உள்ளான ஆடுகளில் இருந்து கீழே விழும் உலர்ந்த புண்ணில் பேராபக்ஸ் கிருமி, பல மாதங்கள் உயிருடன் இருக்கும். இக்கிருமி, ஆடுகளுக்கு ஏற்படும் காயங்கள், தோலில் கீறல்கள் மூலம் ஆடுகளின் உடலுக்குள் சென்று, எபித்தீலியம் என்ற செல்களை பாதித்து, தோலில் கடுமையான புண்களை ஏற்படுத்துகிறது. பொதுவாக, உதட்டுப்புண் நோய், உதடு, மூக்கு, வாய்ப்பகுதி, மடிக்காம்புகள் பகுதியில், இந்நோய் தாக்கும்.

உதட்டுப்புண் நோய் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட பகுதி சிவப்பாக, புண் போல் இருக்கும். இந்த புண் சில நாட்களில், கடினமாக மாறி, பழுப்பு நிற தடிமனான புண் ஏற்படும். அதில் இருந்து, நீர் வடிந்து கொண்டே இருக்கும். பாக்டீரியாவால் தொற்று நோய் ஏற்படாவிடில், நான்கு வாரத்தில், புண்கள் ஆறிவிடும். ஆடுகளுக்கு உதட்டுப்புண் ஏற்பட்டது தெரிந்தால், இளம்புறக்களை சிறு துண்டுகளாக்கி கொடுப்பதன் மூலம், உதட்டுப்புண் உள்ள இடங்களில் அழுத்தம் கொடுக்காமல், ஆடுகள் எளிதாக புற்களை உண்ணும்.

புண்ணின் மேல், கிளிசரின், களிம்பினை, காலை, மாலை இரு வேளையும் தடவி வந்தால், இருவாரத்திலேயே புண் குணமாகும். உதட்டுப்புண் நோய் வராமல் ஆடுகளை காக்க, ஆடுகளின் கொட்டகையில் இருந்து, சினையாக உள்ள ஆடுகளையும், இளம் ஆடுகளையும் தனியாக பிரிக்க வேண்டும். ஆடுகளை கடினமான புற்கள் உள்ள இடத்தில் மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது. ஆடுகள் உள்ள கொட்டகையை, குளோரோபார்ம் கலந்த கிருமி நாசினியை கொண்டு சுத்தமாக கழுவ வேண்டும், என்றனர்.

## வாத்து விற்பனை அமோகம்: ஆந்திர வியாபாரிகள் தஞ்சம்

**தர்மபுரி**: தர்மபுரியில், வாத்து விற்பனை ஜோராராக நடப்பதால், ஆந்திர வாத்து விற்பனையாளர்கள் தர்மபுரியில் முகாமிட்டு உள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் இருந்து ஏராளமான வாத்து வியாபாரிகள், சில தினங்களாக தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி, சேலம் உள்ளிட்ட பகுதிகள் வாத்துக்களை விற்பனை செய்து வருகின்றனர். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் குழுக்களாக பிரிந்து, சாலை ஓரங்கள் வாத்துக்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், வாத்துக்களை வளர்ப்பதற்காகவும், இறைச்சிக்காவும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். சில மாதங்களுக்கு முன், ஒரு ஜோடி வாத்துக்கள், 200 ரூபாய் முதல், 250 வரை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, ஒரு ஜோடி வாத்துக்கள், 300 ரூபாய் முதல், 350 ரூபாய் விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில், ஆட்டு கறி, நாட்டுகோழி மற்றும் பிராய்லர் கோழிக்கறி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அவற்றுடன் ஒப்பிடும் போது, வாத்தின் விலை குறைவாக உள்ளதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் வாத்துக்களை வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து, ஆந்திராவை சேர்ந்த வாத்து வியாபாரி பாலகிருஷ்ணா கூறியதாவது: நாங்கள் கடந்த, 10 ஆண்டுகளுக்கு மேலாக, ஆந்திராவில் இருந்து வாத்துக்களை, தர்மபுரி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் கோடை காலங்களில் விற்பனை செய்து வருகிறோம். இப்பகுதிகளில், விற்பனை செய்யப்படும் வாத்துக்களின் விலையை விட, எங்களிடம் விலை குறைவாக உள்ளதால், பொதுமக்கள் எங்களிடம் வாத்துக்களை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

கடந்தாண்டு ஒரு ஜோடி வாத்துக்கள், 200 ரூபாய் முதல், 250 ரூபாய் வரை விற்பனை செய்தோம். தற்போது, வாகன வாடகை உயர்வு மற்றும் தீவன விலை உயர்வு காரணமாக ஒரு ஜோடி வாத்துக்களை, 300 ரூபாய் முதல், 350 ரூபாய் வரை விற்பனை செய்து வருகிறோம். தமிழகத்தில் விற்கப்படும் நாட்டு கோழி விலையை வாத்துக்களின் விலை குறைவாக உள்ளதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் எங்களிடம் வாத்துகளை வாங்கி செல்கின்றனர், என்றார்.

## ரூ.9.57 கோடியில் திருமங்கலம் பாசன கால்வாய் சீரமைப்பு : விவசாயிகள் நிம்மதி

**விக்கிரமங்கலம்**: மதுரை விக்கிரமங்கலத்தில், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, திருமங்கலம் பாசன கால்வாயில் ரூ.9.57 கோடியில், சிமென்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடக்கிறது.

பேரணையில் இருந்து திருமங்கலம் வரை 28 கி.மீ., துாரம் அமைந்த இக்கால்வாயில், சிமென்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டது. இதன் மூலம் 19.330 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாசன வசதிபெற்றன. பல ஆண்டுகளாக கால்வாயின் சிமென்ட் தளம் சிதைந்ததோடு, மதகுகளும் சேதமடைந்தன. தண்ணீர் வீணாக வெளியேறி, பயிர்கள் கருகின. விவசாயிகள் நஷ்டமுற்றனர். கால்வாயை சீரமைக்க விவசாய கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தனபால் கூறியதாவது: கால்வாயை புதுப்பிக்க, நிலவள, நீர்வள மேம்பாடு திட்டத்தின்கீழ் ரூ. 9.57 கோடி ஒதுக்கப்பட்டது. முதற்கட்டமாக, மேட்டுப்பட்டி, வி.கோயில்பட்டி பகுதியில் இருந்து 9 கி.மீ., துாரம் வரை மண் அள்ளும் இயந்திரம் மூலம் சேதமுற்ற பகுதிகளை அகற்றி, நவீன கருவிகள் மூலம் சிமென்ட் கான்கிரீட் புதிய தளம், மதகுகள், பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி நடக்கிறது. உதவிசெயற்பொறியாளர் சுகுமாறன், உதவி பொறியாளர்கள் ஏ.கே.ராதாகிருஷ்ணன், கோவிந்தராஜ், மாயகிருஷ்ணன், என்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் மேற்பார்வையில் பணி நடக்கிறது, என்றார்.

## சிவகங்கையில் காளான் வளர்ப்பு பயிற்சி

**சிவகங்கை**: விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்க வேளாண் சார்ந்த தொழிலாகிய காளான் வளர்ப்பு பற்றிய செய்முறை பயிற்சி வரும் 8ம் தேதி சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் அருகிலுள்ள உழவர் பயிற்சி மையத்தில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் சார்பில் நடக்க உள்ளது. பயிற்சி 30 விவசாயிகளுக்கு மட்டுமே நடத்தப்பட உள்ளதால் ஆர்வமுள்ள விவசாயிகள் 99521 40932 என்ற எண்ணில் பதிவு செய்யலாம். பயிற்சியின் போது உணவு வழங்கப்படும். இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள உழவர் பயிற்சி மைய இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வாழப்பாடியில் 7,500 மூட்டை பருத்தி ரூ.1.50 கோடிக்கு ஏலம்



**வாழப்பாடி:** சேலம் மாவட்டம், வாழப்பாடியில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கிளையில் புதன்கிழமை பருத்தி ஏலம் நடந்தது. இதில் 7,500 பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. இந்த ஏலத்தில் வாழப்பாடி, மங்களபுரம், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, வீரகனூர், கச்சிரபாளையம், பெரம்பலூர், அரியலூர், சேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்றனர். இதில், ஆர்சிஎச் ரூ.4,850 முதல் ரூ.5,550 வரையும், டிசிஎச் ரூ.5,800 முதல் ரூ.6,800 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் 7,500 மூட்டை பருத்தி, ரூ.1.50 கோடிக்கு விற்பனையானது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

### குடிநீருக்காக திறந்துவிடப்பட்ட காவிரிநீர் மாயனூர் வந்தது விவசாயிகள் மகிழ்ச்சி

**கிருஷ்ணராயபுரம்,** : ஒரு மாதங்களுக்கு பின்னர் மாயனூர் பாசன வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் கருகும் பயிர்களுக்கு தண்ணீர் கிடைத்தாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து வரவேற்றனர். மேட்டூர் அணையின் நீர் மட்டம் மளமளவென சரிந்ததால் பாசனத்திற்கு தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது.

இதனால் காவிரியில் ஊற்று தண்ணீர் மட்டும் சிறிதளவு சென்று கொண்டிருந்தது. காவிரியில் தண்ணீர் இல்லாததால் மாயனூரிலிருந்து பிரியும் கட்டளைமேட்டு வாய்க்கால், தென்கரைவாய்க்கால், புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் ஆகிய மூன்று பாசன வாய்க்கால்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போயின. வாய்க்கால்களில் தண்ணீர் சென்று ஒருமாதங்களுக்கு மேலாகிறது. இதனால் வாய்க்கால் பாசனத்தை நம்பி பயிர் செய்யப்பட்ட வாழை, வெற்றிலை கொடிக்கால், கரும்பு ஆகிய பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை ஏற்பட்டது. காயும் பயிர்களை காப்பாற்ற தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் மேட்டூர் அணையிலிருந்து குடிதண்ணீர் வசதிக்காக காவிரியில் வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் நேற்று முன்தினம் இரவு திறக்கப்பட்டது. மேட்டூரில் திறந்து விடப்பட்ட தண்ணீர் மாயனூர் பழைய கட்டளை தடுப்பணைக்கு நேற்று காலை வந்து சேர்ந்தது.

அங்கிருந்து குடிதண்ணீருக்காக தண்ணீர் காவிரியிலும், பாசன வாய்க்கால்களிலும் பிரித்து விடப்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்கு பிறகு பாசன வாய்க்கால்களில் தண்ணீர் வருவதால் காய்ந்த பயிர்களுக்கும் கொஞ்சம் தண்ணீர் கிடைக்கும். மேலும் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அதேபோல கோடை காலத்தில் குடிதண்ணீருக்கு தண்ணீர் காவிரியில் விடப்பட்டுள்ளதால் குடிதண்ணீர் தட்டுபாடும் நீங்கும் என்பதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பாசன வாய்க்கால்களில் ஒரு மாதத்திற்கு பிறகு தண்ணீர் வந்ததால் மலர் தூவி விவசாயிகள் வரவேற்றனர். மேலும் வாய்க்கால்களிலில் தொடர்ந்து தண்ணீர் வர வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அறுவடையின்போது மரவள்ளி கிழங்குக்கு நல்ல விலை**



**கோவை,**

அறுவடையின்போது மரவள்ளி கிழங்குக்கு நல்ல விலை கிடைக்கும் வேளாண் பல்கலைக்கழகம் முன்னறிவிப்பு

இந்தியாவின் வெப்ப மண்டல பகுதிகளில் முக்கிய பயிராக மரவள்ளி கிழங்கு பயிரிடப்படுகிறது. இதில் மாவுச்சத்து அதிக அளவில் உள்ளது. இதை கிழங்காகவும், பதப்படுத்தப்பட்டு ஜவ்வரிசி மற்றும் சேமியா போன்ற உணவு பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகிறது. மரவள்ளி கிழங்கு கால்நடைகளுக்கு தீவனமாகவும், தொழிற்சாலைகளில் மாவு, எத்தனால் மற்றும் குளுக்கோஸ் தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது.

<u>மரவள்ளி கிழங்கு</u>

உலக அளவில் கடந்த 2012–13–ம் ஆண்டில் 262 மில்லியன் டன் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய் யப்பட்டது. மரவள்ளி கிழங்கை உற்பத்தி செய்யும் நாடுகளை பொறுத்தவரை நைஜீரியாவில் 54 மில் லியன் டன்களும், இந்தோனேசியாவில் 23.92 மில்லியன் டன்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவை பொறுத்தவரை 2.43 லட்சம் எக்டேரில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு, 9.94 மில்லியன் டன்கள் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு, கேரளா, மேகாலயா, அசாம், ஆந்திரபிரதேசம் போன்ற மாநிலங்களில் மரவள்ளி கிழங்கு பரவலாக பயிரிடப்படுகிறது.

ஏற்றுமதி குறைந்தது

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மரவள்ளி கிழங்கு, கிழங்குகளாகவும், மாவுப்பொருளாகவும், ஜவ் வரிசி மற்றும் நார்க்கழிவுகளாகவும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதன்படி 2012–13–ம் ஆண்டின் ஏற்றுமதி மதிப்பானது, 2013–14–ம் ஆண்டுகளில் குறைந்து உள்ளது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் மரவள்ளி கிழங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த மாநிலங்களில் 98 சதவீதம் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மரவள்ளி கிழங்கு கேர ளாவில் கிழங்கு உணவு பொருளாகவும், தமிழகத்தில் மதிப்பூட்டப்பட்ட வர்த்தக பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் மரவள்ளி கிழங்கின் மொத்த சாகுபடி பரப்பளவு 1.5 லட்சம் எக்டேர் ஆகும்.

தமிழகத்தின் சாகுபடி பரப்பளவு

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் 27.3 ஆயிரம் எக்டேரிலும், தர்மபுரி மாவட்டத்தில் 18.4 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், சேலம் மாவட்டத்தில் 17.08 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், சேலம் மாவட்டத்தில் 17.8 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், விழுப்புரம் மாவட்டத்தில் 12.26 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும், ஈரோடு மாவட்டத்தில் 5.89 ஆயிரம் எக்டேர் பரப்பளவிலும் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

இதன்படி தமிழகத்தின் மொத்த மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பளவு 76 சதவீதம் ஆகும். இந்தநிலையில் திருச்சி மாவட்டத்தில் 5.97 ஆயிரம் எக்டேராகவும், கடலூர் மாவட்டத்தில் 3.40 எக்டேராகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2.71 ஆயிரம் எக்டேராகவும், கரூர் மாவட்டத்தில் 2.36 ஆயிரம் எக்டேராகவும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 2.36 எக்டேராகவும் மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருகிறது.

<u>விலை நிலவரம் ஆய்வு</u>

தமிழகத்தில் மார்ச்–ஏப்ரல் மாதங்களில் இறவையிலும், ஜூன்–ஜூலை மற்றும் செப்டம்பர்–டிசம்பர் மாதங்களில் மானாவாரியிலும், தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவமழை காலங்களில் பரவலாகவும் மரவள்ளி கிழங்கு பயிரிடப்படுகிறது.

இதற்கு எச்–226, எச்–165, எம்.வி.டி.–1(முள்ளுவாடி) போன்ற வீரிய ஒட்டு ரகங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்த ரக கிழங்குகள் மாவு, ஜவ்வரிசி தயாரிக்க அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. சேலம், தர்ம புரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இந்த ரகங்கள் 75 சதவீதம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம், கடந்த 10 ஆண்டுகளாக சேலம் மாவட்டத்தில் உள்ள மொத்த சந்தைக ளில் நிலவிய விலை நிலவரங்களை ஆய்வு செய்தது.

<u>ரூ.12 முதல் ரூ.14 வரை விலை</u>

அதன்படி தற்போது சாகுபடி செய்யப்பட்டு உள்ள மரவள்ளி கிழங்குக்கு, நவம்பர்–டிசம்பர் மாத அறுவடையின் போது நல்ல விலை கிடைக்கும் என்று கணித்துள்ளது. இதன்படி கிலோவுக்கு ரூ.12 முதல் ரூ.14 வரை கிடைக்கும் என கணித்துள்ளது.

**தகவல் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.**

**ஜெகதாபட்டினம் மீனவர் வலையில் 127 கிலோ எடையுள்ள சுறா மீன் சிக்கியது**



**கோட்டைப்பட்டினம்,**

மணமேல்குடி ஒன்றியம், ஜெகதாபட்டினம் பகுதியில் இருந்து சுமார் 250–க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். அவர்கள் நடுக் கடலில் வலை வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு மீனவர் வலையில் அதிக எடையுள்ள ஏதோ சிக்கியதுபோல் தெரிந் துள்ளது.

உடனடியாக அந்த மீனவர் வலையை தூக்கி பார்த்துள்ளார். அப்போது அந்த வலையில் சுறாமீன் மாட்டி இருந்தது.

இதைக் கண்ட மீனவர் அந்த சுறா மீனை மீட்டு கடலில் விட முயன்றுள்ளார். ஆனால் அதற்குள் அந்த சுறா மீன் இறந்து விட்டதாக தெரிகிறது.

இதனால் அந்த சுறா மீனை, மீனவர் கரைக்கு கொண்டு வந்தார்.

சுமார் 127 கிலோ எடையுள்ள அந்த சுறா மீன் ரூ.50 ஆயிரத்திற்கும் மேல் விலை போகும் என்று கூறப்படுகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய ராட்சத கொடுவா மீன்!



பாம்பன் நாட்டுப் படகு மீனவர் வலையில் ராட்சத கொடுவா மீன் சிக்கியது. இதனை பாம்பன் பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

பாம்பன் போரிஸ்டன் என்பவரின் நாட்டுப் படகில் நான்கு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் புதன்கிழமை இரவு சென்றனர். நள்ளிரவில் மன்னார் வளைகுடா தீவுப் பகுதியில் மீனவர்கள் வலையை விரித்து காத்திருந்தனர். அப்போது ராட்சத கொடுவா மீன் ஒன்று சிக்கியது. அது சுமார் 16 கிலோ எடையும், 3 அடி நீளமும், 2 அடி உயரமும் உடையதாகவும் இருந்தது.

பொதுவாக கொடுவா மீன் அதிகப்பட்சமாக 5 கிலோ வரை எடை கொண்டது மட்டுமே மன்னார் வளைகுடாவில் பிடிபடுவது வழக்கம். ஆனால், இது ராட்சத கொடுவா மீனாக இருந்ததால், இந்த பாம்பன் மக்கள் வியாழக்கிழமை கடற்கரையில் ஆர்வத்துடன் வந்து பார்வையிட்டனர்.

இந்த மீனைப் பற்றி மரைக்காயர் பட்டிணத்தில் உள்ள மத்திய மீன் ஆராய்ச்சித்துறை ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறும்போது, "இந்த மீனின் பெயர் Giant Sea Perch. இதனை தமிழில் ராட்சத கொடுவா மீன் என்றும் அழைக்கலாம்.

பொதுவாக மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணைப்பில் அதிகப் பட்சம் 5 கிலோ எடை வரையிலும் வளரக் கூடிய கொடுவா மீன்களே அதிகம் காணப்படுகிறது. இந்தோ பசிபிக் கடல், அட்லாண்டிக், ஆர்டிக், பசிபிக் ஆகிய பெருங்கடல்களில் இத்தகைய ராட்சத கொடுவா மீன்கள் காணப்படும். அத்தகைய பெருங்கடல்களில் ஒன்றில் திசை மாறி மீனவரின் வலையில் வலையில் இந்த ராட்சத கொடுவா மீன் சிக்கியிருக்கலாம்.

மேலும் மழைக்காலங்களில் தான் தமிழக மீனவர்களின் வலைகளில் கொடுவா மீன்கள் அதிகளவில் பிடிபடும். ஆனால் கோடை காலத்தில் ராட்சத கொடுவா மீன் பிடிப்பட்டுள்ளது ஆச்சர்யத்தை அளிக்கிறது" என்றார்.